**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.112/2023
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : முருகேஷ்வரி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of June 2023.

30.06.2023

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். எனக்கும் ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே கழிவுநீர் செல்வது தொடர்பாக பிரச்சனை இருந்தது. கடந்த 02.11.2020 ம் தேதி 04.30 மணியளவில் நான் எனது வீட்டின் வாசலில் நின்றுகொண்டிருக்கும்போது ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளின் மகன் வினோத் தேவிடியா அவுசாரி என்று அசிங்கமாக பேசினார். நான் ஏன் இப்படி அசிங்கமாக பேசுகிறாய் என்று வினோத்யிடம் கேட்டேன். அதற்கு வினோத் எனது சேலையை பிடித்து இழுத்து கீழே தள்ளி விட்டார். ஆஜர் 1ம் எதிரி எனது தலைமுடியை பிடித்து இழுத்தார். ஆஜர் 2ம் எதிரி எனது உடம்பில் கையால் அடித்தார்.

2) எனது மகன் பிரபு சண்டையை விலக்கவந்தார். வினோத் எனது மகன் பிரபுவின் வாயில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார். எனது மகனை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன். பின்பு

காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.112/2023
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : பிரபு | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of June 2023.

30.06.2023

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் பேக்கரியில் வேலை செய்கிறேன். ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள், அசா.1 எனது அம்மா. கடந்த 02.11.2020ம் தேதி மாலை 04.30 மணியளவில் ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளும், அவர்களது மகனான வினோத் என்பவரும் எனது அம்மாவிடம் பிரச்சனை செய்துகொண்டிருந்தார்கள். வினோத்குமார் எனது அம்மாவின் சேலையை பிடித்து இழுத்தார். வினோத்குமார் நல்ல குடிபோதையில் இருந்தார்.

2) வினோத்குமாரிடம் நான் என்னவென்று கேட்டபோது கையால் எனது வாயில் குத்தினார் அதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகள் அசிங்கமாக பேசி எனது அம்மாவின் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார்கள். முதுகுளத்தூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன். சண்டைக்கு காரணமான வினோத்தின் பெயரை போலிசார் வழக்கில்

சேர்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.112/2023
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : சாமிநாதன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of June 2023.

30.06.2023

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் மீன்வியாபாரம் செய்கிறேன். ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள், அசா.1 எனது சித்தி. கடந்த 02.11.2020ம் தேதி மாலை 04.30 மணியளவில் ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளின் மகன் வினோத் அசா.1யை தரக்குறைவாக பேசி அசா.1யை கன்னத்தில் அடித்து கீழே தள்ளிவிட்டார். நானும், பிரபுவும் சண்டையை விலக்கிவிடச்சென்றோம்.

2) சண்டையில் அசா.2 பிரபுவின் வாயிலிருந்து இரத்தம் வந்தது. ஆஜர் 2ம் எதிரி தான் பிரபுவின் வாயில் குத்தினார். உடனே நாங்கள் முதுகுளத்தூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். சண்டைக்கு காரணமான வினோத்தின் பெயரை போலிசார் வழக்கில் சேர்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.